விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 138 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 23 சனிக்கிழமை (06.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

மழைக்கு மத்தியிலும்

# தையிட்டி விகாரைக்கு எதிராக போராட்டம்

## வெசாக்கை முன்னிட்டு விழாக்கோலம் பூண்ட விகாரை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றுமாறு வலியுறுத்தி இறுதிநாளான வெசாக் தினத்தில் நேற்றுக் காலை எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. மழைக்கு மத்தியிலும் போராட்டக்காரர்கள் பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வாளர்களால் தையிட்டியில் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

தையிட்டிப் போராட்டக் களத்தில் போராட்டம் மேற்கொள்ளும்மக்களை அச்சுறுத்தும் வகையில் சிலர் நடந்துகொண்டமையால் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்றைய இறுதி நாள் போராட்டத்திற்கு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளமையை சிலர் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி போராட்டக்களத்தில் நுழைந்து மக்களை மிரட்டி போராட்டத்தை திசைதிருப்பும் வகையில் நடந்து 11

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பின்போது

## நாட்டின் நிதி ஸ்திரத்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும்

### சர்வதேச நாணய நிதியம்

(சியோல்)

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பின் போது, நாட்டின் நிதி ஸ்திரத்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

தென் கொரியாவில் நடைபெறும் 11

## கொரோனா இருவர் பலி

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தின் மஹர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இந்த இரண்டு உயிரிழப்புக்களும் பதிவாகியுள்ளதாக 11

## வடக்கில் 3 இடங்களில் முதலீட்டு வலயங்கள்

### விரைவில் அமைச்சரவைப் பத்திரங்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் மூன்று இடங்களில் முதலீட்டு வலயங்களை அமைப்பதற்கு இடங்கள் அடையாளம்காணப்பட்டுள்ளதாகவும், அதற்குரிய அமைச்சரவைப் பத்திரங்கள் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் 11

## யாழ்.மறை மாவட்ட ஆயருடன் அமைச்சர் டக்ளஸ் சந்திப்பு

### சமகால நிலைவரங்கள் தொடர்பில் ஆராய்வு



11

## சகிப்புத்தன்மை, கருணை, மனிதாபிமானத்தை சக மனிதரிடத்தில் பின்பற்றுங்கள்

### வெசாக் வாழ்த்தில் ஐ.நா செயலாளர் நாயகம்



(நியூயோர்க்)

உலகளாவிய ரீதியில் பொது மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் கௌதம புத்தரின் போதனைகளான சகிப்புத்தன்மை, கருணை, மனிதாபிமானம் ஆகிய பண்புகளை பின்பற்றி நடப்பது இன்றியமையாததாகும் என்று ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அன்ரோனியோ குட்டரெஸ் வலியுறுத்தியுள்ளார்.

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள விசேட செய்தியில் 11

## அரியாலையில் வீதி விபத்து

### ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலையில் இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை 5 மணியளவில் அரியாலை நாவலடிப் பகுதியில் குறித்த விபத்து 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## விசா தேவைகளுக்கு

லண்டன் Tour விசா தேவைப்படுபவர்கள்
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
மட்டுப்படுத்தப்பட்ட விசாக்கள் மட்டுமே உள்ளது.

இன்றே பதிவு செய்ய எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Hybrid international hub (pvt) ltd, Jaffna

077 815 5920, 076 250 0098

(C-6486)


## கோடீஸ்வர வர்த்தகர் வீட்டில் கொள்ளையிட்டவர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பில் பரபரப்பை ஏற்படுத்திய பெண் உட்பட கொள்ளைக் கும்பல் ஒன்றை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொரளையிலுள்ள கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரின் வீட்டிற்குள் புகுந்து ஒன்றரைக் கோடி ரூபா பெறுமதியான தங்கப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு நாணயங்களை கொள்ளையிட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி பொரளை கோடீஸ்வர வர்த்தகரின் வீட்டிற்குள் புகுந்த கபர சுரேஷ் என்ற சந்தேகநபர், தங்கப் பொருட்களையும் பணத்தையும் திருடியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தடுப்பு பிரிவின் பொலிஸ் பரிசோதகர்கள் பண்டார மற்றும் மதுராங்க ஆகியோருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய கிருலப்பனை மற்றும் கொழும்பு பிரதேசங்களில் வைத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் 42, 46 மற்றும் 53 வயதுடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7.9)


## பணம் கண்டெடுப்பு

யாழ். திருநெல்வேலி சந்தைப் பகுதியில் ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவற விட்டவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்.

077 892 0225


## இரண்டாம் ஆண்டு நினைவு



தோற்றம் 1940 - 05 - 23

மறைவு 2021 - 04 - 28

(15471)

அமரர் **துரையர் துரைசிங்கம்**

(ஓய்வுபெற்ற புகையிரத காவலர்)

(Special Class Head Guard)

எம் குலவிளக்கே எம் வாழ்வில் ஒளியேற்றிய சுடரே
வாழ்வு முழுதும் உம் நினைவும் அன்பும் மறக்காதே.
தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை தந்தையே
உம் சொல் கேட்க ஏங்குகின்றோம்
வந்தெமை தேற்றும்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி

குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



எமது நிலையத்தின் ஆண்டு
விழாக்களின் போது சேவை
மனப்பான்மையோடு எமக்கு ஒலி
பெருக்கி சேவையினை பல
ஆண்டுகள் வழங்கிய ஆனந்தன்
என அனைவராலும் அழைக்கப்பட்ட

திரு. **வேலுப்பிள்ளை விவேகானந்தன்**

அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாத
ஒன்று. அவரை இழந்து வாடும்
குடும்பத்தாருக்கு எமது நிலையம்
ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து
கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய வில்லுபாதி முருகனை
வேண்டுகின்றோம் (C-6488)

அறிவகம் சன சமூகநிலையம் முருகன் கோவிலடி
புலோலி வட மேற்கு

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்புடையீர்!

கடந்த 22.03.2023 அன்று இறைபதமடைந்த
எமது புத்திரன்

அமரர் **திலகநாதன் வினோஜன் (வினோ)**





அவர்களின் 45 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 07.05.2023 (ஞாயிற்றுக்கிழமை) அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதமாக வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 668 8710

(15447)

புதிய கொலனி,
மாங்குளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்ச்சல் ஏற்பட்டால் தாமதிக்காது மருத்துவமனை செல்லுங்கள்

## இலங்கை மருத்துவ சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவமனைக்கு செல்ல வேண்டியது அத்தியாவசியமாகும் என இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் மருத்துவர் வின்யா எஸ். ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், "மழை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகிறது.

இவ்வாண்டில் இதுவரையில் 30 ஆயிரத்திற்கு அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதில் 50 சதவீதத்துக்கும் அதிகமானோர் மேல் மாகாணத்தில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே காணப்படுகின்றனர்.

எனவே காய்ச்சல் போன்ற நிலைமைகள் ஏற்படும் போது உடனடியாக மருத்துவர்களை நாட வேண்டியது அவசியமாகும்.

இதே வேளை கடந்த ஓரிரு வாரங்களாக கொரோனா தொற்றாளர்களும் இனங்காணப்பட்டு வருகின்றனர்.

ஆசிய நாடுகளான இந்தோனேசியா, வியட்நாம், சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளில் அதிகளவான கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர்.

எனினும் இந்த நிலைமை குறித்து நாம் வீண் அச்சமடையத் தேவையில்லை.

எவ்வாறிருப்பினும் கொரோனா காலத்தில் பின்பற்றிய சுகாதார வழிமுறைகளை தொடர்ந்தும் பேணுவதே ஆரோக்கியமானதாகும்.

குறிப்பாக நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்கள் மற்றும் முதியோர் மிக அவதானமாக செயற்பட வேண்டும்.

இதே போன்று தற்போது எலிக்காய்ச்சல் பரவும் வீதமும் அதிகரித்து வருகிறது.

பற்றீரியாவினூடாகவே எலிக் காய்ச்சல் பரவுகின்றது. விலங்குகளின் சிறுநீரிலிருந்து இந்த பற்றீரியாக்கள் பரவுகின்றன.

வயல் போன்ற பகுதிகளிலேயே குறித்த பற்றீரியாக்கள் அதிகளவில் பரவி காணப்படும்.


இதனால் ஏற்படக் கூடிய எலிக்காய்ச்சல் தீவிரமடைந்து மரணம் கூட சம்பவிக்கக் கூடும்.

மார்ச் தொடக்கம் மே மாதம் வரை பெரும்போக நெற்செய்கைக் காலம் என்பதால் விவசாய சமூகத்தினர் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

காய்ச்சல், கண் சிவத்தல், தசை வலி, மஞ்சள் நிறத்தில் சிறுநீர் செல்லல் உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்டால் தாமதமின்றி மைருத்துவர்களை நாட வேண்டும்.

எவ்வாறிருப்பினும் நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள மக்கள் தமது சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.' எனத் தெரிவித்துள்ளார். (நி)

# பேருந்துகள் நேருக்கு நேர் மோதி பாரிய விபத்து 23 பேர் மருத்துவமனையில் அனுமதி



(கொழும்பு)

இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் 23 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம், கொழும்பு - கண்டி பிரதான வீதியின் கஜூகம பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து நேற்றுக் காலை 7.30 அளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

தனியார் பேருந்து ஒன்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும் மோதுண்டே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த பேருந்தின் சாரதிகள் உள்ளிட்ட 23 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி)

# வெளிநாட்டு கையிருப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வெளிநாட்டுக் கையிருப்பின் அளவு கடந்த மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் ஏப்ரல் மாதத்தில் 2.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின்படி கடந்த மார்ச் மாதம் 2,694 மில்லியன் டொலர்களாகப் பதிவாகியிருந்த வெளிநாட்டுக்கையிருப்பின் அளவு கடந்த ஏப்ரல் மாதத்தில் 2,755 மில்லியன் டொலர்களாக உயர்வடைந்துள்ளது.

அண்மைய சில மாதங்களாக 360 ஆகக் காணப்பட்ட அமெரிக்க டொலர் ஒன்றுக்கு எதிரான ரூபாவின் பெறுமதி, தற்போது சுமார் 320 ரூபா என்ற மட்டத்தில் பேணப்பட்டு வருகின்றது.

மறுபுறம் சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய இலங்கை எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் தேறிய வெளிநாட்டுக்கையிருப்பின் அளவை 710 மில்லியன் டொலர்களாக அதிகரிக்க வேண்டிய கடப்பாட்டைக்கொண்டிருக்கின்றது.

நிதி உட்பாய்ச்சலின் மூலம் கையிருப்பின் அளவை அதிகரிக்க வேண்டுமெனில், வட்டி வீதங்களைத் தொடர்ந்தும் உயர்வான மட்டத்தில் பேண வேண்டிய தேவைப்பாட்டை இலங்கை கொண்டிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் வருடத்தின் முதற்காலாண்டில் நாடு முகங்கொடுத்திருந்த நிதித்திரவத்தன்மை நெருக்கடியானது (இலகுவாகப் பணமாக மாற்றக்கூடிய தன்மை) தற்போது தனியார் கடன் கோரிகையில் ஏற்பட்டிருக்கும் எதிர்மறைத்தாக்கத்தின் விளைவாகப் படிப்படியாகக் குறைவடைந்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டில் இறங்கிய பல்கலை பேராசிரியர்கள் சங்கம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு பல்கலைக்கழக பேராசிரியர்களின் சங்கம் தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழக பேராசிரியர்கள் சங்கம் நேற்று முன்தினம் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே சங்கத்தின் தலைவர் பேராசிரியர் ஷஷ்ம பன்னேஹெக இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஈடுபடாமல் வந்தமை தொடர்பில் மக்கள் மத்தியில் பிழையான தகவல் சென்றிருந்தது. என்றாலும் எமது நியாயமான கோரிக்கை தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்த தேவை எமக்கு இருந்தது.

எமது பிரதான கோரிக்கையாக இருந்தது வரிக்கொள்கையில் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்றே கேட்டிருந்தோம்.

இதுவரை எமது கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. பெற்றோர்கள் மற்றும் மக்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு எமது சங்கம் தீர்மானித்தது.

மாணவர்களுக்காக நாங்கள் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் ஈடுபட தீர்மானித்திருக்கிறோம். அதனால் இந்த போராட்டத்தை நாங்கள் இன்னும் கைவிடவில்லை. இதனை வேறு வழியில் முன்னெடுத்துச்செல்ல தீர்மானித்திருக்கிறோம் என அவர் தெரிவித்தார். (நி)

# கட்டுநாயக்காவில் சீரற்ற காலநிலை

## மத்தளவுக்கு திருப்பி அனுப்பப்பட்ட விமானங்கள்

(கொழும்பு)

கட்டுநாயக்கவில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கவிருந்த விமானங்கள் மத்தள சர்வதேச விமான நிலையத்துக்கு திருப்பி விடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 10.25 மணியளவில் மெல்பேர்னிலிருந்து கொழும்பு வந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL 605 மோசமான காலநிலை காரணமாக மத்தள விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இலங்கை மற்றும் இந்தியாவில் நிலவும் மோசமான வானிலை காரணமாக பல விமானங்கள் தாமதமாகி வருவதாக கட்டுநாயக்க விமான நிலையம் தெரிவித்துள்ளது. (நி)

# மேலும் அறுவருக்கு கொரோனா தொற்று

(கொழும்பு)

நாட்டில் மேலும் 6 பேருக்கு கொவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளது.

கடந்த சில தினங்களாக கொவிட்-19 தொற்று உறுதியாகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பை பதிவு செய்து வருகின்றது.

இதன்படி, கடந்த 3 தினங்களுக்குள் தொற்று உறுதியான 15 இற்கும் மேற்பட்டோர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது (நி)

# கருவில் உள்ள சிசுவுக்கு அறுவை சிகிச்சை அமெரிக்காவில் மருத்துவர்கள் சாதனை

(வோஷிங்டன்)

உலகில் முதன் முறையாக தாயின் வயிற்றில் இருந்த பொழுது குழந்தை ஒன்றுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் அமெரிக்காவில் பதிவாகியுள்ளது.

அமெரிக்காவின் லூசியானாவில் உள்ள பேடன் ரோக் நகரைச் சேர்ந்த கென்யட்டா கோல்மன் கொடிய மரபணு நோயினால் பாதிக்கப்பட்ட மையால் கென்யட்டாவின் வயிற்றிலிருந்த குழந்தையும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கென்யட்டா மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்ட நிலையில், வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு மூளை அறுவை சிகிச்சை செய்ய முடிவு செய்துள்ளனர்.

அவர் கர்ப்பமாகி 34 வாரங்கள் மற்றும் 2 நாட்களுக்குள் 10 பேர் அடங்கிய மருத்துவர்கள் குழுவினால் இந்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

பிறப்புக்கு முந்தைய குறைபாட்டை சரி செய்துள்ளதாகவும் மற்றும் பிறந்த பின்னர் அதனை மாற்றுவதற்கு முயற்சிப்பதை விட, இதய செயலிழப்பை ஏற்படுவதற்கு முன்னரே தலைகீழாக மாற்றியுள்ளோம் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இதன் மூலம் குழந்தைகளிடையே நீண்டகால மூளை பாதிப்பு, இயலாமை அல்லது இறப்பு அபாயத்தை குறிப்பிடத்தக்க அளவில் குறைக்க உதவும் எனவும் தெரிவித்துள்ளனர். (நி)

# கொரிய, ஜப்பானிய வேலைவாய்ப்பு ஒதுக்கீடுகள் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள வேலை ஒதுக்கீட்டை அதிகரிப்பது தொடர்பில் ஜப்பான் [illegible] [illegible] துரையாடல் வெற்றி யடைந்துள்ளதாக வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு இறுதிக்குள் நாட்டில் அதே அளவு கூடுதல் வேலை வாய்ப்புகள் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர்களின் நலனை அதிகரிப்பதற்காக மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள பல நாடுகளின் தூதரகங்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாக வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மேலும் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானில் நடைபெற்ற சர்வதேச மெய்வல்லுநர் போட்டி

## இலங்கையர்கள் முன்னிலை




ஜப்பானில் நடைபெற்ற 38 ஆவது "ஷிஸ"ஓக்கா" சர்வதேச மெய்வல்லுநர் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த கயன்திகா அபேரட்ன முதலாம் இடத்தையும் அருண தர்ஷன 3 ஆம் இடத்தையும் பெற்றனர்.

பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் கயன்திகா அபேரட்ன முதலாம் இடத்தையும் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் அருண தர்ஷன 3 ஆம் இடத்தையும் பெற்றனர்.

38ஆவது "ஷிஸ"ஓக்கா" சர்வதேச மெய்வல்லுநர் போட்டிகள் ப்றீஃபெக்சுரல் "ஷிஸ" ஓக்கா" விளையாட்டரங்கில் மே 1ஆம் திகதி ஆரம்பமாகி 3 ஆம் திகதி நிறைவடைந்தது.

3 இறுதிப் போட்டிகளைக் கொண்ட பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் கடைசி இறுதிப் போட்டியில் பங்குபற்றிய கயன்திகா 2 நிமிடங்கள், 4.35 செக்கன்களில் நிறைவு செய்து முதலாம் இடத்தைப் பெற்றார்.

அத்துடன் 24 வீராங்கனைகள் பங்குபற்றிய 3 இறுதிப் போட்டிகளுக்கான ஓட்டு மொத்த நிலையிலும் கயன்திகா முதலாம் இடத்தைப் பெற்று 1000 அமெரிக்க டொலர்கள் பணப் பரிசை தனதாக்கிக் கொண்டார்.

இதேவேளை, ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கை வீரர் அருண தர்ஷன ஓட்டு மொத்த நிலையில் 3ஆம் இடத்தைப் பெற்றார். (4-6)

# ஐதராபாத் அணியை வீழ்த்தியது கொல்கத்தா நைட் ரைடர்ஸ்

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் நேற்றைய போட்டியில் சன்ரைசர்ஸ் ஐதராபாத், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. டாஸ் வென்ற கொல்கத்தா பட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, கொல்கத்தா அணி முதலில் களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர் குர்பாஸ் டக் அவுட்டானார். வெங்கடேஷ் அய்யர் 7 ரன்னிலும் ஜேசன் ராய் 20 ரன்னிலும் ஆட்டமிழந்தனர்.

கப்டன் நிதிஷ் ரானா அதிரடியாக ஆடி 31 பந்தில் 42 ரன்னில் வெளியேறினார். ஆண்ட்ரூ ரசல் 24 ரன், சுனில் நரைன் 1 ரன், ஷர்துல் தாக்குர் 8 ரன்னிலும் வெளியேறினர். ஒரு புறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் ரிங்கு சிங் பொறுப்புடன் ஆடி 46 ரன்கள் எடுத்தார்.

இறுதியில் கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 171 ரன்களை சேர்த்தது. இதையடுத்து, 172 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஐதராபாத் அணி களமிறங்கியது. இதில் அதிகபட்சமாக எய்டன் மார்க்ரம் 41 ரன்கள் எடுத்தார். தொடர்ந்து, ஹெயின்ரிச் கிளாசன் 36 ரன்களும் அப்துல் சமாத் 21 ரன்களும் ராகுல் திரிபாதி 20 ரன்களும் மயங்க் அகர்வால் 18 ரன்களும் அபிஷேக் சர்மா 9 ரன்களும் மார்கோ ஜான்சன் ஒரு ரன்னும் எடுத்தனர்.

புவனேஷ்வர் குமார் 5 ரன்களுடனும் மயங்க் மார்கண்டே ஒரு ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் விளையாடினர். இந்நிலையில் இந்த ஆட்டத்தின் முடிவில் ஐதராபாத் அணி 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 166 ரன்கள் எடுத்து ஆட்டத்தை இழந்தது. இதன் மூலம், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 5 ரன்கள் வித்தியாசத்தில் அபாரமாக வெற்றி பெற்றது. (4)




## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2824

**மதுமிதா**

சீக்கிரம் உருட்டிட்டு போடி தோட்டக்காரன் வந்திட போறான்...



அடப்பாவி அப்போ இது உன் தோட்டம் இல்லையா...

**றுக்குமணி**

காய்கறியை கூட கடைசிவரை அழுக விடாம பார்த்துக்க பிரிட்ஜ் இருக்கா நமக்கு யார் இருக்கா...



**றூபன்**

பல் டாக்டரை பார்க்க போனேன். அங்கே லேடி டாக்டர் இருந்தாங்க திரும்பி வந்துட்டேன்.. ஏன்னா...



நாம எந்த பொண்ணுகிட்டயும் பல்லைக்காட்டி நிற்க கூடாதுல.

**கார்வண்னன்**

ஆத்தா இலையில சோறு போட்டா, பொரியல் வைச்சா, அப்பளமும் வைச்சா, எல்லாத்தையும் வச்சிட்டு



குழம்பு ஊத்தாம சீரியல் பார்க்க போய்ட்டியே..!

**நவனீதா**

வாழ்க்கைல எதையாவது நிம்மதிய சாதிக்கலானு பார்த்தா



கடைசியா நிம்மதியா இருக்குறதே பெரிய சாதனையா இருக்கும் போல...

**பாலா**

வேலை செய்யும் போது ஒருத்தனும் நம்மள கவனிக்க மாட்டனுங்க.



ஒரு அஞ்சு நிமிஷம் செல் போன எடுத்து பார்த்தால் போதும் எப்ப பாரு செல்ல நோண்டிக்கிட்டே இருனு ஒரு குரல் வரும் ச்சோ....

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் சீன உதவித்திட்டத்தில் கடற்றொழிலாளர்களுக்கு வீடு

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(அராலி)

**வட மாகாணத்தில் சீனாவின் உதவி திட்டத்தில் கடற்றொழிலாளர்களுக்கு வீடுகள் வழங்கப்பட உள்ளதாக யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.**

நேற்று முன் தினம் வியாழக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வட மாகாண மக்களுக்காக சீன அரசிடம் இருந்து சுமார் 1500 மில்லியன் ரூபாய் கிடைக்கப் பெறவுள்ள நிலையில் குறித்த நிதியுதவியில் அரிசி, கடற்றொழிலாளர்களுக்கு வலை மற்றும் வீடுகள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

அது மட்டுமல்லாது ஜப்பான் நாட்டு அரசாங்கத்தினால் சுமார் 1600 மில்லியன் ரூபாய் கிடைக்கப்பெறவுள்ள நிலையில் அதற்கான வேலை திட்டங்களை தயார் செய்து வரும் நிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கியும் எமக்கு உதவத் தயாராக இருக்கிறது. ஆகவே நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் புதுடில்லி செல்ல உள்ள நிலையில் இந்தியாவும் எமக்கு பல மில்லியன் ரூபாய் உதவித் திட்டங்களை வழங்கும் என எதிர்பார்க்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-104)



சாவகச்சேரி 523 ஆவ்து இராணுவ படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் வெசாக் ப்ண்டிகையை முன்னிட்டு வெள்ளிக்கிழமை காலை சாவகச்சேரி நகரில் தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது இராணுவத்தினரால் பாற்சோறு உள்ளிட்ட ஆகாரங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம்:-சுபேசன்)

# வவுனியா சிறையிலிருந்து 15 கைதிகள் விடுதலை

(குருமன்காடு)

வெசாக் தினத்தை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வெசாக் தினத்தை முன்னிட்டு நாடு தழுவிய ரீதியில் 988 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யபடவுள்ளதாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைவாக, நீதிமன்ற உத்தரவுக்கமைய வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறு குற்றங்களுடன் தொடர்புடையோர், தண்டப் பணம் செலுத்தாதோர், தண்டனைக் காலம் நிறைவடையும் நிலையில் இருந்தோர் என 15 பேர் விடுதலை செய்யப்பட்டனர். (4-6-250)



நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் வெசாக் தினத்தை முன்னிட்டு நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி காஞ்சனா விமலா வீரா தலைமையில் சிற்றுண்டி வகைகளும் குளிர்பானமும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. (படம்:-மகாலிங்கம்)

# சங்கடஹர சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்.வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சங்கடஹர சதுர்த்தி உற்சவம் நாளை மறுதினம் இரவு 7.45 மணிக்கு இடம்பெறும். இதன்போது அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டப பூஜை நடைபெற்று விநாயகப்பெருமான் திருவீதிவலம் வருவார் என பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (4-6)



காங்கேசன்துறை சாரணர் மாவட்டத்திற்கு புதிய ஆணையாளராக சங்கரப்பிள்ளை கிருபானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார். (படம்:-சுபேசன்)

# இராசிபலன்

**06.05.2023**
**சித்திரை 23, சனிக்கிழமை**
**பிரதமை முன்னிரவு 10.36 மணிவரை**
**விசாகம் முன்னிரவு 9.57மணிவரை**

**சுபநேரம்-2.56-4.26 மணிவரை**
**இராகுகாலம்-8.56-10.26 மணிவரை**

**சந்திராஷ்டமம்-ரேவதி,அச்சுவினி**

**வளவன்**

**மேஷம்**
விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவார்கள், வெளியூர்த் தொடர்புகளில் அனுகூலம் தரும், விருப்பங்கள் நிறைவேறும் நாள், போசன சுகமுண்டு.

**கடகம்**
மனதில் நீண்டகாலமாக நிலவி வந்த பாரம் குறையும், வாகன சுகமுண்டு, சுபகாரிய பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்**
குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பயணங்களால் பலனுண்டு, கற்பனை மிகுதியான நாள், கொள்கைப்பிடிப்பினை கொஞ்சம் தளர்த்தும் எண்ணம் உருவாகும்.

**மகரம்**
அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், எதிர்பாராத உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**ரிஷபம்**
தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள் தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரும்.

**சிம்மம்**
பணத்தேவை எளிதில் பூர்த்தியாகும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன நன்மையுண்டு.

**விருச்சிகம்**
வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கைகூடும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**கும்பம்**
தொலைபேசி வழித் தகவல் மனக்குழப்பத்தை அகற்றும், நண்பர்கள் பக்க பலமாக இருப்பர், வீண்பழிகள் அகல நடவடிக்கை எடுப்பீர்கள், பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்**
நல்லவர்களின் தொடர்புகள் வந்து சேரும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர வழிபாடு செய்யுங்கள்.

**கன்னி**
வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு**
தூர தேசத்திலிருந்து அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெற [illegible]வமான நாள்.

**மீனம்**
ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பொது வாழ்வில் கௌரவக் குறைவான சில சம்பவங்கள் ஏற்படலாம், திருடர் பயமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒருவரின் குணநலன்தான் அவரின் எதிர்காலம்**

# யாழ். மாவட்டத்தில் இவ்வருடம் 600 வீட்டுத் திட்டங்கள்

## மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

(அராலி)

யாழ். மாவட்டத்தில் இவ்வருடம் வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்காக 600 வீட்டு திட்டம் வழங்கப்பட்டுவதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் முரளிதரன் (காணி) தெரிவித்த நிலையில் இறுதிப் பட்டியலை காட்சிப்படுத்த வேண்டும் என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி கலந்துரையாடலில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட விடயதானங்கள் தொடர்பில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் முரளிதரன் வீட்டு திட்டம் தொடர்பில் விளக்கம் அளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் யாழ்.மாவட்டத்தில் 10 இலட்சம் ரூபாய்வீட்டுதிட்டங்கள்379, ஆறு இலட்சம் ரூபாய் வீட்டுத்திட்டம் 221ம் வழங்கப்படவுள்ளது. யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவிலும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட அதாவது நலன்புரி நிலையங்களில் இருந்தோர்விசேட தேவையுடையவர்கள், சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பெண் தலைமைத்துவங்களைக் கொண்ட குடும்பங்கள் ஆகியவை முன்னுரிமைப் படுத்தப்படுகிறது.

எனினும் இறுதிப் பட்டியல் தயாரிக்கப்படாத நிலையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டு வருவதாக தெரிவித்தார். இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இறுதிப் பட்டியல் தயாரிக்கப்பட்டதும் அதனை உரிய இடங்களில் காட்சிப்படுத்துமாறு கோரிக்கை விடுத்தார். (4-6-104)

# யாழ். சிறையில் இருந்து 14 கைதிகள் விடுதலை



(யாழ்ப்பாணம்)

வெசாக் தினத்தினை முன்னிட்டு நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண சிறைச்சாலையில் இருந்து 14 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வெசாக் தினத்தினை முன்னிட்டு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பின் அடிப்படையிலேயே அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்கள், தண்ட பணம் செலுத்த முடியாததால் சிறைத்தண்டனை அனுபவித்தவர்கள் உள்ளிட்டவர்களே விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (4-6-33-104)

## பழனியானந்தன் சனசமூக நிலைய

# ஆண்டு நிறைவு விழாவும் முன்பள்ளி திறப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் முன்பள்ளி திறப்பு விழாவும் நாளை 7 ஆம் திகதி பிற்பகல் 3.01மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் சனசமூக நிலையத் தலைவர் மு.நிறஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாண மேலதிக அரச அதிபர் (காணி) சு.முரளிதரன், தியாகி அறக்கட்டளை நிறுவுநர் வா.தியாகேந்திரன், வலம்புரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஹே.விஜவர்டன, ஓய்வுநிலை ஆசிரியர் மேழியூரான் நா.புனிததயாபரன், மேழியூரான் நா.முருகானந்தன், மேழியூரான் தி.இரஞ்சித்துகுமார் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது ஆசியுரையினை இளவாலை ஆனைவிழுந்தான் தேவஸ்தான ஆதீனகுரு பிரம்மஸ்ரீ இராமபாலச்சந்திரக் குருக்களும் நூல் ஆய்வுரையை உளவளத்துணை டிப்ளோமா சமூகவியல் பட்டதாரி இ.தேவராசாவும் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு சாரங்கா இசைக் குழுவுடன் தென்னிந்திய பின்னணிப் பாடகர்கள் கலந்து சிறப்பிக்கும் மாபெரும் இசை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளன. (4)

# குளிர்பானத்திற்குள் மயக்கமருந்து கொடுத்து முச்சக்கர வண்டி சாரதிகளிடம் திருட்டு

## அவதானமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழில் பயணிகள் போல பாசாங்கு செய்து முச்சக்கர வண்டி சாரதிகளிடம் நூதனமாக பணம் மற்றும் நகைகளை திருடிச் சென்ற இரண்டு சம்பவங்கள் ஒரே நாளில் பதிவாகியுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப் பட்ட முச்சக்கரவண்டி சாரதிகளால் காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் வெவ்வேறாக முறைப்பாடு பதிவு செய்யப் பட்டுள்ளது.

குறித்த முச்சக்கர வண்டி சாரதிகள் இருவரும் தெல்லிப்பழை மற்றும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் பகல் பருத்தித்துறையில் இருந்து முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கு அமர்த்தி கீரிமலையில் உள்ள காணிகளை பார்க்கவென கூறி வந்த ஒரு பெண்ணும் இரண்டு ஆண்களும் குறித்த திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

கீரிமலையில் முச்சக்கர வண்டி சாரதிக்கு குளிர்பானத்திற்குள் மயக்க மருந்து கலந்து கொடுத்து விட்டு சாரதியிடம் இருந்த பணம் மற்றும் நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.

அதே கும்பல் மற்றொரு முச்சக்கர வண்டியை கீரிமலையில் இருந்து வாடகைக்கு அமர்த்தி பருத்தித்துறைக்கு செல்லும் வழியில் குறித்த சாரதிக்கும் குளிர்பானத்திற்குள் மயக்க மருந்து கலந்து கொடுத்து விட்டு சாரதியிடம் இருந்த பணம் மற்றும் நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.


சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். முச்சக்கர வண்டி சாரதிகள் குறித்த விடயம் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுவது திருட்டுக்களை தடுக்க உதவும் என பொலிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது. (4-6-33)

# பரிசில் தினம்

(யாழ்ப்பாணம்)

யா/புன்னாலைக்கட்டுவன் இந்து தமிழ் கலவன் பாட சாலை பரிசில் தின நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதி பர் த.ஸ்ரீமுரளி தலைமையில் இடம்பெறும். (4)

# பாடசாலை வீதியில் வெள்ளம் மாணவர்கள் கடும் பாதிப்பு



(யாழ்ப்பாணம்)

யா/நீர்வேலி றோ.க.த.க பாடசாலை வீதி கடந்த மூன்று வருடங்களாக சாதரண மழை பெய்யும் நேரங்களில் கூட போக்குவரத்து செய்யமுடியாதளவிற்கு மிக மோசமாக உள்ளது. இதனால் மாணவர்களது பாதணிகள், ஆடைகள் என்பனவும் அழுக்கடைந்து மிகவும் சிரமப்படுகிறார்கள்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்வீதியை புனரமைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர், பாடசாலைச் சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதேவேளை நேற்று காலை பாடசாலை வருவதற்கு மாணவர்கள் அதிபருடன் இணைந்து கற்களை வீதியில் பரவும் நடவடிக்கையை முன்னெடுத்தனர். (4-6-33)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 100 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 120 | 200 |
| தக்காளி | 400 | 300 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 200 | 200 |
| கோவா | 250 | 220 | 200 |
| கரட் | 160 | 200 | 250 |
| பூசணி | 60 | 40 | 60 |
| புடோல் | 120 | 140 | 150 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 320 | 400 |
| பெரிய வெங்காயம் | 150 | 120 | 140 |
| பாகற்காய் | 800 | 350 | 500 |
| வெண்டக்காய் | 200 | 160 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 100 | 150 |
| பயற்றங்காய் | 800 | 400 | 500 |
| லீக்ஸ் | 280 | 400 | 350 |
| பீற்றூட் | 240 | 200 | 300 |
| கறிமிளகாய் | 200 | 300 | 200 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 1000 |
| போஞ்சி | 450 | 300 | 450 |
| கத்தரிதம்புள்ள | 140 | 80 | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 150 |
| தேசிக்காய் | 450 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 350 | 300 |
| வெங்காயப்பூ | — | — | 600 |
| முள்ளங்கி | 80 | 100 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 |
| ஈரப்பலா | 100 | — | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# விவசாயம் சார் சூழற்றொகுதிகளில் களைக்கட்டுப்பாட்டில் இடைத்தடை வேதிப்பொருட்களின் (allelochemicals) செல்வாக்கு

இடைத்தடை நிரோதிப்பு எனப்படுவது தாவரங்களால் சுரக்கப்படும் துணையனுசேப விளைவுகள் **(secondary metabolites).** அயலில் உள்ள தாவரங்கள், தாவர வித்துகள் மீது காட்டும் எதிர்மறையான விளைவுகள் ஆகும். இவ்விளைவுகளைப் பிறப்பிக்கும் இரசாயனங்கள் இடைத்தடை வேதிப்பொருட்கள் எனப்படும்.

தாவரவியல் ஆய்வாளர்கள் வேதியியல் இடைத்தடை தொழிற்பாட்டை, தாவரங்கள் போட்டியாளர்களை விரட்டுவதற்காக பரிணமித்த ஒரு தந்திரோபாயமாக கருதுகின்றனர்.


உயிரனுசேப ரீதியில் இவ்வேதிப் பொருட்களின் தொகுப்பு செலவுமிக்கதாகையால் இவற்றைச் சுரக்கும் ஆற்றலுள்ள தாவரங்களிலும் இவை எப்போதும் சுரக்கப்படுவதில்லை. தாவரம் அண்டைய போட்டித் தாவரங்களாலோ / களைகளாலோ/ மேய்ச்சல் விலங்குகளாலோ/ நோய்க் கிருமிகளாலோ அச்சுறுத்தலிற்குள்ளாகும் போதே இவை சுரக்கப்பட்டு விடுவிக்கப்படுகின்றன.

இடைத்தடை வேதியியற் பண்புகள் அதிகமாக களைகளிலேயே காணப்பட்டாலும், இப்பண்புகளைக் காட்டும் பல விவசாயப் பயிர்களும் அடையாளங் காணப்பட்டிருக்கின்றன. (உ+ம் கோதுமை, சோளம், நெல், பார்லி, சூரியகாந்தி, கரும்பு, தினை). இடைத்தடை வேதிகள் வேர்ச் சுரப்புகளாக, வாழும் மற்றும் உக்கும் தாவர இழையங்களின் கசிவுகளாக மண்ணினுள்ளும் ஆவியாகின்ற சேதனச் சேர்வைகளாக **(VOCs)** வளியிலும் விடுவிக்கப்படுகின்றன.

மண்ணினுள் விடுவிக்கப்படும் வேதிகளின் பிரதான தொழிற்பாட்டுப் பொறிமுறைகளாக வித்து முளைத்தலை தடுத்தல், வேர் வளர்ச்சியை தடுத்தல், ஒளித்தொகுப்பை நிரோதித்தல் மற்றும் நாற்றுகளின் வளர்ச்சியை நிரோதித்தல் என்பன காணப்படுகின்றன.

செயற்கைக்களை கொல்லிகளில் தங்கிய நவீன விவசாயத்தின் பிரதிகூலங்களும் அவற்றிற்கான மாற்றீடுகளின் தேவைப்பாடும் பல விஞ்ஞான இலக்கியங்களில் பலமுறை சுட்டிக் காட்டப்பட்டுள்ள போதும் விவசாயிகள் இம் மாற்றீடுகளை பின்பற்றுவதில் பல நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறான ஒரு சூழ்




நிலையில், இடைத் தடைத் தாவரங்களை இடைத்தடைச் சாகுபடிகளாக **(allelo pathic cultivars),** மூடுபயிர்களாக **(cover crops),** தளைக்கூழங்களாக **(mulches),** ஊடுபயிர்களாக **(intercro pping)** மற்றும் சுழற்சிப் பயிர்களாக **(crop rotation)** களைக் கட்டுப்பாட்டில் பயன்படுத்துவது அனுகூலமானதாக அமையலாம். ஒரு பயிரினத்தின் சாதாரண சாகுபடியைவிட இடைத் தடைச் சாகுபடிகளை பயிரிடுதல், பயிர்நிலத்தில் களை களை எதுவித மேலதிக செலவுகளுமின்றி இயற்கையாகவே கட்டுப்படுத்துகின்றது.

விவசாயிகள் பயிரிடுவதற்காக சாகுபடியொன்றை தெரிவு செய்யும் போது விளை திறனிற்கு மேலதிகமாக அச்சாகுபடியின் இடைத்தடைத் திறனையும் கருத்திற் கொள்வது சாகுபடித்தேர்வில் பயனுள்ளதாக அமையும்.

இடைத்தடை இயல்பைக் கொண்ட மூடுபயிர்கள் (சூரியகாந்தி, இராசவள்ளி) பயிர் நிலத்தில் மண் வளத்தைப் பேணவும் நோய்க் கிருமிகளை, பீடைகளை விரட்டவும், களைக்கட்டுப்பாட்டிலும் உதவுகின்றன. தனியொரு இனத்தை சேர்ந்த மூடுபயிரை விட இடைத்தடைப் பண்பு கொண்ட பல்வேறு பயிர்களின் கலவையொன்றை மூடுபயிராக பயன்படுத்துவது களைக் கட்டுப்பாட்டு வினைத்திறனை மேலும் அதிகரிக்கின்றது.

தளைக்கூழங்களின் பிரதான பயன்பாடு மண்ணின் ஈரப்பதனை பேணுதலும் சேதன வளமாக்கியாக தொழிற்படுவதும் ஆகும். இடைத்தடைப் பண்புள்ள தரவரங்களின் கழிவுகளை தளைக்கூழங்களாக பயன்படுத்தும்போது உக்கும் தளைக்கூழங்களிலிருந்து மண்ணுள் கசியும் இடைத்தடை வேதிகளால் களை கொல்லல் தொழிற்பாடும் மேலதிக அனுகூலமாக கிடைக்கின்றது.

இடைத்தடைப் பயிர்களை ஊடுபயிராக உபயோகிப்பது செலவற்ற சூழல் நேயம்மிக்க முறையில் களைகளைக் கட்டுப்படுத்த உதவும். சோளத்தின் இடையே கௌபி ஊடுபயிராக பயிரிடப்பட்டவிடத்து பசளி, கோழிக்காற்புல், காக்கைக்காற்புல் என்பவற்றின் அடர்த்தி 50% ஆல் குறைந்ததை ஆய்வாளர்கள் அவதானித்துள்ளனர்.

இடைத்தடைப் பண்பு கொண்ட அவரைக்குடும்பத் தாவரங்களை (கௌபி, பட்டாணி) ஊடுபயிரிடுதல் மேற்கூறிய அனுகூலங்கட்கு மேலதிகமாக மண்ணில் நைதரசன் பதிப்பிலும் உதவுகின்றது.

சுழற்சிமுறைப் பயிர்ச் செய்கையில் ஒரு போகத்திற்கு இடைத்தடைப் பயிர்களை பயிரிடுதல், எதிர்வரும் போகங்கட்கு களைகளின் தாக்கத்தை வெகுவாகக் கட்டுப்படுத்த உதவும். இவ்வகையில் சுழற்சிப் பயிர்களாக நெல், கோதுமை, பீற்றூட், சூரியகாந்தி, பட்டாணி, இராசவள்ளி, சாத்தாவாரி என்பன பயிரிடப்படலாம். இத்தாவரங்களால் மண்ணினுள் விடுவிக்கப்படும் இடைத்தடை வேதிகள் மண்ணில் தங்கியிருந்து எதிர்வரும் போகங்கட்கும் களைகளை கட்டுப்படுத்த உதவும்.

இடைத்தடைப் பயிர்கள் மேற்கூறிய வகைகளில் களைக்கட்டுப்பாட்டில் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் இவ்வுபயோகங்கள் விரும்பத்தகாத விளைவுகளை கொண்டுவராமலில்லை. பல இடைத்தடைத் தாவரங்கள் தன்-நச்சுத் தன்மை (autotoxicity) கொண்டவை.

இவற்றால் சுரக்கப்படும் இடைத்தடை வேதிகள் தன்னினத் தாவ ரங்களின் வளர்ச்சியையும் நிரோதிக்கக்கூடியவை. இடைத்தடை இரசாயனங்கள் களைகளை தேர்ந்து தாக்குவதில்லையாகையால் விவசாயப் பயிர்கள் அடங்கலாக இவற்றின் வேர்ச் சுரப்பு எல்லைக்குள் அங்கும் அனைத்து தாவரங்களும் தாக்கத்திற்குள்ளாகும்.

இதன் காரணமாக இடைத் தடைப் பயிர்களை பயிரிட முன் பிரதான பயிர்கள் இவற்றிற்கு சகிப்புத்தன்மையை/எதிர்ப்புத்தன்மையை கொண்டிருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

சுழற்சிமுறைப் பயிர்கள், ஊடுபயிர்கள், மூடுபயிர்கள் என வெவ்வேறு இனத் தாவரங்களை பயிர் நிலங்கட்குள் அறிமுகப்படுத்துவது புதிய பீடைகள் நோயாக்கிகளின் ஆதிக்கத்திற்கு வழிசமைப்பதாக அமையலாம்.

போதியளவு முன்னறிவின்றி இம்முறைகளைப் பின்பற்ற விளைதல் எதிர்பாராத பயிர் நாசங்கட்கு விவசாயிகளை இட்டுச் செல்லலாம்.

இடைத்தடைப் பயிர்களை களைக்கட்டுப்பாட்டில் பயன்படுத்துவதில் பல சவால்கள் காணப்படுகின்ற போதிலும் இவற்றின் சூழல்நேயத்தன்மை பொருளாதார நேயமான அணுகுகை என்பன இவற்றின் உபயோகத்தின் ஊக்கிகளாக அமைகின்றன.

சேதன களைகொல்லிகள் பொதுவாக அசேதன இரசாயனங்களைவிட வீரியம் குறைந்தவை. வீரியமான இரசாயனங்கட்கு பழக்கப்பட்ட நிலங்களில் சேதனக் களைக்கட்டுப்பாட்டின் வினைத்திறன் கேள்விக்குரியதாகவே காணப்படுகிறது.

இதனால் அநேக விவசாயவியலாளர்கள் முற்றுமுழுதாக இடைத்தடை வேதிப் பயன்பாட்டிற்கு மாறுவதை விடுத்து படிமுறையான அறிமுகங்களையே பரிந்துரைக்கின்றனர். இடைத்தடை பண்புள்ள தாவரங்களும் இடைத்தடை வேதிகளும் களைகட்கு எதிரான போராட்டத்தில் நம்பிக்கை தருவனவாக அமைகின்ற போதும் இவை அவதானத்துடனேயே அணுகப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

**க.அனோபன்**
செய்முறை வழிகாட்டுனர், தாவரவியற் துறை,
விஞ்ஞான பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர்

171



"நாதா! ஏதோ பிரம்மாவுக்குப் பக்கத்தில் இருந்து பார்த்தவரைப் போல் பேசுகிறீர்களே! இந்த வர்ணனைகளுக்கெல்லாம் நான் ஒருத்திதானா அகப்பட்டேன்? தங்களுடைய அந்தப்புரத்தில் எவ்வளவோ பெண்ணரசிகள் இருக்கிறார்கள் இராஜகுலங்களில் பிறந்தவர்கள்.

எத்தனையோ நீண்டகாலமாக அவர்களுடன் இல்லறம் நடத்தியிருக்கிறீர்கள். என்னைத் தாங்கள் பார்த்து இரண்டரை ஆண்டுதான் ஆகிறது!" என்று நந்தினி சொல்வதற்குள், பழுவேட்டரையர் குறுக்கிட்டார். அவருடைய உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்த உணர்ச்சி வெள்ளத்தை வார்த்தைகளின் மூலமாகவாவது வெளிப்படுத்திவிட விரும்பினார் போலும். அவரைப் பற்றி எரிந்த தாபத்தீயைச் சொல்மாரியினால் நனைத்து அணைக்க முயன்றார் போலும்.

"நந்தினி! என் அந்தப்புரத்து மாதர்களைப் பற்றிச் சொன்னாய். பழைமையான பழுவூர் மன்னர் குலம் நீடித்து வளர வேண்டும் என்பதற்காகவே அவர்களை நான் மணந்தேன். அவர்களில் சிலர் மலடிகளாகித் தொலைந்தார்கள். வேறு சிலர் பெண்களையே பெற்றளித்தார்கள். 'கடவுள் அருள் அவ்வளவுதான்' என்று மன நிம்மதியடைந்தேன். பெண்களின் நினைவையே வெகுகாலம் விட்டொழித்திருந்தேன்.

இராஜாங்கக் காரியங்களே என் கவனம் முழுவதையும் கவர்ந்திருந்தன. சோழ ராஜ்யத்தின் மேன்மையைத் தவிர வேறு எந்த நினைவுக்கும் இந்த நெஞ்சில் இடமிருக்கவில்லை. இப்படி இருக்கும் போதுதான் பாண்டியர்களோடு இறுதிப் பெரும் யுத்தம் வந்தது. வாலிபப் பிராயத்துத் தளபதிகள் பலர் இருந்த போதிலும் என்னால் பின்தங்கி இருக்க முடியவில்லை. நான் போர்க்களம் சென்றிராவிட்டால், அத்தகைய மாபெரும் வெற்றி கிடைத்தும் இராது. பாண்டியர் படையை அடியோடு நாசம் செய்து மதுரையில் வெற்றிக் கொடி நாட்டிய பிறகு கொங்கு நாடு சென்றேன்.

அங்கிருந்து அகண்ட காவேரிக் கரையோடு திரும்பி வந்து கொண்டிருந்தேன். வழியில் காடு அடர்ந்த ஓர் இடத்தில் உன்னைக் கண்டேன். முதலில் நீ அங்கு நிற்கிறாய் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை. கண்ணை மூடித் திறந்து பார்த்தேன். அப்போதும் நீ நின்றாய்.

'நீ வன தேவதையாக இருக்க வேண்டும் அருகில் சென்றதும் மறைந்து விடுவாய்! என்று எண்ணிக் கொண்டு நெருங்கினேன். அப்போதும் நீ மறைந்து விடவில்லை. 'புராணக் கதைகளிலே சொல்லியிருப்பது போல், சொர்க்கத்திலிருந்து சாபம் பெற்றுப் பூமிக்கு வந்த தேவ கன்னிகை அல்லது கந்தர்வப் பெண்ணாயிருக்க வேண்டும் மனித பாஷை உனக்குத் தெரிந்திராது!' என்று எண்ணி கொண்டு, 'பெண்ணே! நீ யார்?' என்று கேட்டேன். நீ நல்ல தமிழில் மறுமொழி கூறினாய். 'நான் அநாதைப் பெண் உங்களிடம் அடைக்கலம் புகுந்தேன். என்னைக் காப்பாற்றுங்கள்' என்றாய். உன்னைப் பல்லக்கில் ஏற்றி அழைத்துக் கொண்டு வந்தபோது என் மனம் எண்ணாததெல்லாம் எண்ணியது.

உன்னை எங்கேயோ, எப்போதோ, முன்னம் பார்த்திருப்பது போலத் தோன்றியது. ஆனால் நினைத்து நினைத்துப் பார்த்தும் எங்கே என்று தெரியவில்லை. சட்டென்று என் மனத்தை மூடியிருந்த மாயத்திரை விலகியது. உண்மை உதயமாயிற்று. உன்னை இந்த ஜன்மத்தில் நான் முன்னால் பார்த்ததில்லை. ஆனால் முந்தைய பல பிறவிகளில் பார்த்திருக்கிறேன் என்பது தெரிந்தது. அந்தப் பூர்வ ஜன்மத்து நினைவுகள் எல்லாம் மோதிக் கொண்டு வந்தன. நீ அகலிகையாக இந்த உலகில் பிறந்திருந்தாய் அப்போது நான் தேவேந்திரனாக இருந்தேன். (தொடரும்)



## சிறுவர் அரங்கம்

## நண்டு, கொக்கைக் கொன்ற கதை

(நேற்றைய தொடர்ச்சி)

குளத்திலிருந்த நண்டு ஒன்று இதை கவனித்தது. அதற்கும் வேறு குளத்திற்குச் செல்ல உள்ளுக்குள் ஆசை சுரந்தது. "ஓ சீவகாருண்யனே! என்னையும் அவ்விடத்திற்குக் கொண்டு போங்கள்" என்று கெஞ்சியது.

வருங்காலத்தில் எதுவும் வழிய வரும் என்று உள்ளுக்குள் துள்ளிக் கொண்ட கொக்கு, நண்டையும் கௌவிக் கொண்டு பறந்தது.

பறக்கும் போது வழியில் மீன்களின் முள்ளுடல்கள் ஆங்காங்கே சிதறி இருப்பதைக் கண்டது நண்டு.



அதற்கு "பக்" கென்றது. அத்துடன் வேறு நீர் நிலைக்குக் கொண்டுச் செல்வதாகக் கூறி மீன்களைத் தின்றுவிடும் கொக்கின் வஞ்சகம் நண்டுக்குச் "சட்"டென்று புரிந்து விட்டது. தன் நிலையும் அப்படித் தானா?

[illegible] நண்டுக்கு ஒரு உபாயம் தோன்றியது. வைரத்தை வைரத்தால் அறுப்பது போல் அதற்கு மூளை வேலை செய்தது.

"கொக்காரே! நீங்கள் என்மேல் இரக்கப்பட்டு எடுத்துக் கொண்டு வந்தீர்கள். அங்கே என் உறவினர்கள் பலர் இருப்பதால், என்னை மீண்டும் அங்கே கொண்டு சென்றால் அவைகளையும் காண்பிப்பேன்" என்றது நண்டு.

"அப்படியா? இன்னும் இருக்கிறதா நண்டுகள்?"

"எனக்கு உறவினர்கள் அதிகம் பல இருக்கின்றன." "ஆஹா! அதிர்ஷ்டம் என்றால் இப்படித்தான் வர வேண்டும் நம்பாடு யோகம் தான்" என்று மகிழ்ந்த கொக்கு மீண்டும் நண்டைக் கௌவிக் கொண்டு பழைய குளத்தை நோக்கிப் பறந்தது.

குளத்துக்கு நேராக வரும் போது அது வரை மண்டு போலிருந்த நண்டு தன் கொடுக்கினால் கொக்கின் கழுத்தை இரண்டு துண்டாக்கிவிட்டு குளத்து நீரில் விழுந்து உயிர் பிழைத்துக் கொண்டது.

அபாயம் சொன்னவனிடமே உபாயம் கேட்ட மீன்கள் செத்தன.

வஞ்சமனத்தானின் உபாயமும் அபாயமே என்றறிந்து கொன்று விட்ட நண்டு பிழைத்தது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை ஒப்புக்கொள்ளும் துணிவும், திருத்திக்கொள்ள விரும்பும் விருப்பமும் தான் வெற்றி பெறுவதற்கான இரு வழிகள்.

– லெனின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விபத்தால் கொன்ற பாவம் யாரிடம் சேரப் போகிறது!

வடபுலத்தில் நாளாந்தம் இடம்பெறும் விபத்துக்கள் பற்றி இன்னமும் யாரும் கருசனை காட்டுவதாக இல்லை.

ஆம், வடபுலத்தில் நாளாந்தம் மூன்று நான்கு பேர் என விபத்தால் மரணமடைகின்றனர்.

அண்மையில் அல்லைப்பிட்டி, ஊர்காவற்றுறை வீதியில் நடந்த விபத்தொன்றில், இரண்டு இளம் பெண்கள் உயிரிழந்து போயினர்.

அந்தச் துயரச் சம்பவம் இன்னொரு விபத்துச் செய்தியோடு மறைந்து போகிறது.

இதுதான் இன்றைய வடபுலத்தின் நிலைமை.

விபத்து நடக்கின்ற இடங்களுக்குச் சென்று நாடாபிடித்து அளப்பதும் அறிக்கை எழுதுவதையும் தவிர, வடபுலத்து போக்குவரத்துப் பொலிஸார் செய்த சாதனை வேறு எதுவுமில்லை.

இதற்கும் மேலாக, இலஞ்சமும் பக்கச்சார்பும் செல்வாக்கும் பொலிஸார் மத்தியில் கணிசமாக வேலை செய்வதாகவும் பொது மக்கள் பேசிக் கொள்கின்றனர்.

சரி, இலங்கைப் பொலிஸார் சிங்கள மக்களுக்கானவர்கள். அவர்கள் தமிழ் மக்களின் உயிரிழப்புப் பற்றியோ அன்றி தமிழர் பகுதியில் இடம்பெறும் விபத்துக்களின் அதிகரிப்புப் பற்றியோ அதிகம் அலட்டிக் கொள்ள மாட்டர்கள் என்ற கருத்தியலும் உண்டு.

அவ்வாறான எண்ணப்பாடு போக்குவரத்துப் பொலிஸாரிடம் இல்லை என்றால், யாழ்ப்பாண நகரத்தில் போக்குவரத்து நெரிசல் இருக்கின்ற வேளைகளில் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டு வாகனங்களை ஒழுங்குபடுத்தாதது ஏன்? என்ற நியாயமான கேள்வியும் எழவே செய்யும்.

உண்மை. வீதிச் சமிக்ஞை பொருத்தப்பட்ட இடங்களைத் தவிர, யாழ்ப்பாண நகரின் வேறு எந்த இடத்திலும் போக்குவரத்து நெரிசலைச் சீர்படுத்தும் பணியில் போக்குவரத்துப் பொலிஸார் ஈடுபடுவதேயில்லை.

குறிப்பாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, காங்கேசன்துறை வீதி, ஸ்ரான்லி வீதி, மின்சார நிலைய வீதி உள்ளிட்ட சுற்றுவட்டத்தில் குறிப்பிட்ட நேரங்களில் போக்குவரத்து நெரிசல் என்பது மிகவும் மோசமாக இருக்கும்.

ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டு போக்குவரத்து நெரிசலை நிவர்த்தியாக்குவதில்லை.

மாறாக அந்த நெரிசல் நேரத்திலும் ஓரமாக நின்று வாகனங்களை இடைமறித்து ஆவணங்களைச் சோதிப்பதில் பொலிஸார் ஆர்வப்படுவதை பல வேளைகளில் அவதானிக்க முடிகிறது.

இங்குதான் கடமைக்கும் செயலுக்குமிடையில் வேறுபாடு காணப்படுகிறது.

எது எவ்வாறாயினும் வடபுலத்தில் இடம்பெறும் மிகமோசமான விபத்துக்கள் குறித்து விசேட மாநாடு நடத்தப்பட்டு அதன்மூலம் விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கான விடயங்களை வகுக்க வேண்டும்.

இல்லையேல் விபத்தால் ஏற்படும் கொலைப் பாவம் சாரத்தியப் பரீட்சகர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைவரையும் சேரும் என்பது கருடபுராணத்தின்படி நிரூபிக்கப்படுகிறது.

# இனப் பிரச்சினைக்கான தீர்வு எப்படி கிடைக்கும் என்பது கேள்விக்குறியே

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி தெரிவிப்பு

நாட்டில் சிங்கள பௌத்தமயமாக்கல் நடந்து கொண்டிருக்கையில் இனப் பிரச்சினைக்கான தீர்வு எப்படி கிடைக்குமென் பது கேள்விக்குறியே என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்

நேற்று வெள்ளிக்கிழமை ரெலோ இயக்கத்தின் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில் ஐ.எம்.எப் பணம் கொடுப்பது சம்பந்தமாக சில நிபந்தனைகளை விதித்துள்ளது. அந்த நிபந்தனைகளில் ஊழல்கள் விசாரிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிலும் மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தின் ஊழல் காரணமாகத்தான் இந்த நாடு மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது. ஆகவே இந்த ஊழலை விசாரிக்காத பட்சத்தில் நாடு மிகவும் மோசமான சூழலில் அதாவது பின் தங்கிய நிலையில் தொடர்ந்து செல்லும் வாய்ப்புகள் இருக்கிறது.

ஆகவே மகிந்த ராஜபக்ஷ குடும்பம் இந்த ஊழல் செயற்பாடுகள் மூலம் நாட்டின் பொருளாதார வீழ்ச்சியை கொண்டு வந்து இன்றும் நடமாடிக்கொண்டிருக்கும் அவர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் அனைத்தும் விசாரணை செய்யப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் கோரிக்கையாக முன்வைக்கிறோம்.

அப்படி இல்லை என்றால் இங்கு முதலீடு செய்யப்பட்ட வங்கிகளின் பணங்கள் எல்லாம் இந்த கடனுக்காக எடுக்கப்பட்டு மிக மோசமான ஒரு சூழல் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே ஊழலை விசாரிப்பதன் ஊடாகத்தான் இந்த நாட்டிலே முன்னேற்றகரமான செயற்பாடுகளை செய்ய முடியும். ஊழல் என்பது கொழும்பில் மட்டுமல்ல மகிந்த ராஜபக்ஷ மட்டும் அல்ல நடுவன அரசு கொழும்பிலிருந்து ஒரு சில அதிகாரிகள் ஊடாக வடக்கு கிழக்கிலே குறிப்பாக கொழும்பு உட்பட் இலங்கை பூராக சில அதிகாரிகளூடாகவும் ஊழல் விடயங்களில் ஈடுபடுகின்றனர். இவையும் விசாரிக்கப்பட வேண்டும். ஜனாதிபதி இனப்பிரச்சினைக்கு இவ்வருடத்துக்குள் தீர்வு என மீண்டும் அறிவிக்க தொடங்கி இருக்கிறார்.

எங்களை பெற்றுத்த வரையில் தீர்வு என்பது எப்படி கிடைக்கும் என்பது கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது. அந்தக் கேள்வியை ஜனாதிபதியிடமே நாங்கள் கேட்கின்றோம்.

வடக்கு கிழக்கிலே தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படுகின்ற வேலை தொடர்ச்சியாக இடம்பெறுகின்றது. அது புத்தசாசன அமைச்சாக இருக்கலாம், வனவள திணைக்களமாக இருக்கலாம், வன ஜீவராசிகள் திணைக்களமாக இருக்கலாம், இப்படி திணைக்களங்களிடம் அதிகாரங்களை கொடுத்துவிட்டு இனப்பிரச்சினைக்கு தீர்வு என்பது எப்படி சாத்தியாகும்.

எங்களைப் பொறுத்தவரையில் இந்த மண்ணை மீட்பதற்காகத்தான் பல போராளிகள் தங்களுடைய உயிரை கொடுத்தார்கள். பொதுமக்கள் தங்கள் உயிர்களை அர்ப்பணித்தார்கள். இப்படி எங்களுடைய பூர்வீக மண் தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த வடக்கு கிழக்கு மண் படிப்படியாக தமிழர்கள் பூர்வீகம் இல்லாத ஒரு நிலைமையை இந்த திணைக்களங்களுடன் இணைந்து இந்த் அரசாங்கமும் திட்டமிட்டு செய்து வருகின்றது.

இப்படியான ஒரு சூழல் இருக்கும் மட்டும் இனப் பிரச்சினைக்கு தீர்வு என்பது எப்படி கிடைக்கும் என்பது கேள்வியாகவே இருக்கின்றது.

ஆகவே வெறும் வார்த்தைகளில் ஜனாதிபதி தீர்வு தீர்வு என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. எங்களுடைய வடக்கு கிழக்கில் இருக்கின்ற மகாவலி வலயம் போன்று காணப்படுகின்ற திணைக்களங்களின் ஆதிக்கத்தை நிறுத்தி தமிழ் மக்களுடைய காணிகளை அவர்களுக்கு ஒப்படைத்து குறிப்பாக இராணுவத்திடம், கடற்படையிடம், இருக்கிற மக்களுடைய காணிகளை ஒப்படைத்து இந்த இக்கட்டான சூழலை தவிர்த்து செய்யப்படுகின்ற பேச்சு வார்த்தை தான் நல்ல தீர்வை கொடுக்கும் நல்ல ஒரு சமிக்ஞையாக இருக்கும்.

இந்த விடயங்களில் கவனம் செலுத்தாது ஒரு வருடத்திலேயே தீர்வு கிடைக்கும் என்று சொல்வது ம்க்களைத் தொடர்ந்தும் ஏமாற்றுகின்ற செயலாகவே இருக்கும். மக்கள் நன்றாக நிதானமாக இருக்கிறார்கள். தொடர்ந்து இப்படி சொல்வதை ம்க்கள் நகைச்சுவையாக தான் பார்ப்பார்களே தவிர நம்பி சிந்திக்க மாட்டார்கள். தொடர்ச்சியாக இப்படியான விஷயங்களை பேசுவதை விட்டு ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை களில் இறங்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (ம-7,9)

## கொழும்பை வந்தடைந்தது அமெரிக்க சொகுசு கப்பல்

(கொழும்பு)

அமெரிக்க சொகுசு பயணிகள் கப்பல் ஒன்று நேற்று பிற்பகல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

570 பயணிகள் மற்றும் 369 பணியாளர்களுடன் Insignia என்ற கப்பல் இந்தியா கொச்சியில் இருந்து வந்தது.

இந்தக் கப்பல் இன்று இரவு மியன்மர் நோக்கி புறப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

Insignia கப்பலில் இருந்து வந்த சுற்றுலா குழுவினர் கொழும்பு நகருக்கு விஜயம் செய்ய உள்ளனர். (ம-7,9)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** அச்சுவேலி தொழிற்பேட்டை-எண்ணெய் தொழிற்சாலை, அச்சுவேலி தொழிற் பேட்டை , ஜான்ட்ரா மெஷ் இன்டஸ்ரியல் பி.வி.ரி, கார்கில்ஸ்-மானிப்பாய், கொமர்ஷல் வங்கி-மானிப்பாய், ஈஞ்சடி வைரவர் கோவிலடி-மானிப்பாய், மானிப்பாய் மருத்துவ மனை, மானிப்பாய் சந்தை, மேதர் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல் [illegible] மெய்ரா ஹவுஸ்-தலைமன்னார், தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், வங்காலைப்பாடு சென்ட்லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, பேசாலை -ஐஸ் தொழிற்சாலை,Grotto of lady lourds church pesalai, கட்டுகாராங் குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங் குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், படப்பாடி நீர் வழங்கல், பருத்திப்பண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரிய கரைசல், பேசாலை சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்புத் திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், துள்ளு குடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளு குடியிருப்புத் திட்டம், வங்காலைப் [illegible] பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெசாக் தினத்தை முன்னிட்டு

## ஆயிரம் பேருக்கு உணவு வழங்கிய வவுனியா பொலிஸார்

(வவுனியா)

வெசாக் தினத்தை முன்னிட்டு வவுனியா பொலிஸாரால் ஆயிரம் பேருக்கு உணவுப் பொதி வழங்கி வைக்கப்பட்டது.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தால் சமுதாய பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் காத்தார் சின்னக்குளம் சிவில் பாதுகாப்பு அமைப்பு ஊடாக ஆயிரம் பேருக்கு உணவு வழங்கப்பட்டது. ஏ9 வீதியால் பயணித்த பலரும் தமது வாகனங்களை நிறுத்தி உணவினைப் பெற்றுச் சென்றனர்.

வவுனியா தலைமை பொலிஸ் நிலையம் முன்பாக பௌத்த, இந்து மத குருமார்களின் ஆசிர்வாதத்துடன் இந்நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சமுதாய பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி, காத்தார் சின்னக்குளம் கிராம அலுவலர், சமுதாய பொலிஸ் குழு உறுப்பினர்கள், காத்தார் சின்னக்குளம் சமுதாய பொலிஸ் குழுவினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7,9,104)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 22.04.2023-01.05.2024

**வருத்தங்களை மனதில் மறைத்து வாழும் மகர இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 3 இல் சஞ்சரித்து வந்த குருபகவான், 22.04.2023 முதல் 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். அர்த்தாஷ்டம குருவாக சஞ்சரித்தாலும் அதன் பார்வைப் பலனால் நன்மைகளைக் கொடுப்பார். ஜென்மச் சனி விலகி இப்பொழுது குடும்பச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகின்றது. எனவே பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது என்றாலும் அர்த்தாஷ்டம குரு இடையிடையே தாக்குதல்களையும் தடைகளையும் கொடுக்கத்தான் செய்வார். ஆக்கபூர்வமாக சிந்தித்து எதையும் முடிவெடுக்க இயலாது. வரவைவிட செலவு அதிகரிக்கும். கை வலி, கால் வலி என்று ஏதேனும் ஒரு தொல்லை இருந்து கொண்டேதான் இருக்கும். அதிலிருந்து விடுபட வியாழன் தோறும் விரதமிருந்து குரு பகவானை வழிபடுவதோடு சுயஜாதகத்தில் திசாபுத்திக்கேற்ற தெய்வங்களை தேர்ந்தெடுத்து யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வருவது நல்லது.

**குரு இருக்கும் இடத்தின் பலன்!**

நவக்கிரகங்களில் சுபகிரகமாக

# குடும்பத்துடன் புனித யாத்திரைகள் செல்வீர்கள்!



## ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

விளங்கும் குரு பகவான் உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். அவர் அர்த்தாஷ்டம குருவாக சஞ்சரிக்கும் பொழுது மன அமைதி குறையும். விற்பனை செய்த சொத்துக்களால் வில்லங்கங்கள் ஏற்படும். இருப்பினும் குருவை கும்பிடுவதன் மூலம் ஓரளவு நன்மைகள் வந்து சேரும். மன்னவன் நான்கில் நிற்க மலைபோல துயரம் சேரும்! கண்ணெதிரே வந்த வாய்ப்பு கைநழுவிச் செல்லும் உண்மை! முன்னாளில் இருந்த நோய்கள் முற்றிலும் மீண்டும் தாக்கும்! பொன்னவன் வழிபாட்டாலே புதுப்பாதை கிடைக்கும் உண்மை! என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. அந்த அடிப்படையில் அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கம் வரும்பொழுது ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். இடம், பூமியால் சில பிரச்சினைகள் ஏற்படலாம். நெருங்கிய சொந்தங்களுக்குள் மனஅமைதி குறையும். தாயின் உடல் நலத்திலும் கவனம் தேவை.

**வெற்றிகளைக் குவிக்கும் வியாழனின் பார்வை!**

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவான் உங்கள் இராசிக்கு 8, 10, 12 ஆகிய மூன்று இடங்களையும் பார்க்கின்றார். குரு பார்வை பதியும் அந்த மூன்று இடங்களும் புனிதமடைகின்றது. எனவே இழப்புகளை ஈடு செய்ய புதிய வழிபிறக்கும். இல்லத்தில் ஏற்படும் வீண் விரயங்களிலிருந்து விடுபட சுபவிரயங்களை மேற்கொள்ளுங்கள். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். அஷ்டமஸ்தானத்தை குரு பார்ப்பதால் மாற்று மருத்துவத்தின் மூலம் உடல் நலத்தை சீராக்கிக் கொள்ள இயலும். விலகிச் சென்ற உறவினர்கள் இப்பொழுது மீண்டும் வந்து இணைவர். பணிபுரியும் இடத்தில் நீங்கள் கேட்ட இடமாற்றம் கிடைக்கலாம். குருவின் பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் முத்தான தொழில்கள் வாய்க்க வேண்டும் அல்லவா? எனவே இனி ஜீவனத்திற்கு சிரமமில்லை. படித்து முடித்தும் படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது வேலையும் கைநிறையச் சம்பளமும் கிடைக்கும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். பொதுநலம் மற்றும் அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கும். பணிபுரியும் இடத்தில் இதுவரை கிடைக்காத சலுகைகள் இப்பொழுது கிடைக்கும். குரு பார்வை 12 ஆம் இடத்தில் பதிவதால் ஆதாயம் தரும் விதத்தில் அதிக பயணங்கள் ஏற்படும். வெளிநாட்டில் இருந்து வியக்கும் தகவல் வரலாம். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். குடும்பத்துடன் புனித யாத்திரைகள் செல்வீர்கள். வீட்டிற்குத் தேவையான ஆடம்பரப் பொருட்களை வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்!**

அசுவதி நட்சத்திரக்காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது: குரு பகவான் அசுவதி நட்சத்திரக்காலில் கேது சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது ஏற்றமும் இறக்கமும் கலந்த நிலை உருவாகும். வரவு திருப்திகரமாக இருந்தாலும் உடனுக்குடன் செலவாகிவிடும். தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் புதிய பங்குதாரர்களைச் சேர்த்துக்கொண்டு நினைத்த இலக்கை அடைய முயற்சிப்பர். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளிடம் பக்குவமாக நடந்துகொள்வது நல்லது. உங்கள் முன்னேற்றத்தைப் பற்றி யாரிடமும் விபரிக்க வேண்டாம். அதேபோல் குடும்பப் பிரச்சினைகளையும் மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். பரணி நட்சத்திரக்காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது: குரு பகவான் பரணி நட்சத்திரக்காலில் சுக்கிரன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது நல்ல பலன்கள் ஏராளமாக நடைபெறும். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். எனவே பிள்ளைகளால் பெருமை சேரும். வசதி வாய்ப்புகள் பெருக புது யுக்திகளைக் கையாள்வீர்கள். நீடித்த நோய் அகலும். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். தங்கம், வெள்ளி போன்றவை வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள். மங்கல ஓசை மனையில் கேட்கும் வாய்ப்பு உருவாகும். கார்த்திகை நட்சத்திரக்காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது: குரு பகவான் கார்த்திகை நட்சத்திரக்காலில் சூரியன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை. எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. திடீர், திடீரென மாற்றங்கள் வந்து கொண்டேயிருக்கும். அஷ்டமாதிபதியாக சூரியன் விளங்குவதால் மனநிம்மதி குறையும். விரயங்கள் அதிகரிக்கும். உறவினர்களும் உடனிருப்பவர்களும் பகையாக மாறலாம். அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு வீண் பழிகள் வரலாம். எதையும் நிதானித்துச் செய்வது நல்லது. அடுத்தவர்களுக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையால் பிரச்சினைகள் உருவாகலாம். பணியாளர்கள் தொல்லை அதிகரிக்கும்.

**ராகு-கேதுப் பெயர்ச்சி!**

மேஷத்தில் குரு சஞ்சரிக்கும் காலத்தில் 08.10.2023 அன்று மீன இராசிக்கு ராகுவும் கன்னி இராசிக்கு கேதுவும் செல்கின்றனர். உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் ராகுவும் ஒன்பதாமிடத்தில் கேதுவும் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் நெருக்கடி நிலை குறைந்து நிம்மதி கிடைக்கும். எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. விற்பனையான நிலம் பூமியிலிருந்து வர வேண்டிய நிலுவைத் தொகை வந்து சேரும். உடன்பிறப்புகளின் இல்லங்களில் நடைபெறும் விழாக்களை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். பெற்றோர் வழிப்பிரச்சினைகள் அகலும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**குருவின் வக்கிர காலம்!**

(12.09.2023 முதல் 20.12.2023 வரை) இக்காலத்தில் குரு பகவான் அசுவதி மற்றும் பரணி நட்சத்திரக் காலில் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவர் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. உடன் பிறப்புகள் வழியில் பிரச்சினைகள் உருவாகும். உயர்மட்ட அதிகாரிகள் உங்கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள மறுப்பர். பணிபுரியும் இடத்தில் நிம்மதி இருக்காது. உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காது. கொள்கைப் பிடிப்பைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்ள நேரிடும். தடைகளும் தாமதங்களும் வந்து சேரும். குரு 12 இற்கு அதிபதியாகவும் இருப்பதால் பயணங்களால் ஒரு சிலருக்கு பலன் உண்டு.



**மகரம்**

உத்திராடம் 2,3,4-ம் பாதம்
திருவோணம், அவிட்டம் 1,2-ம் பாதம்

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

மகர இராசியில் பிறந்த பெண்களுக்கு உடல்நலத்தில் அதிக கவனம் தேவை. மாறி மாறி தொல்லை வந்து கொண்டிருக்கிறதே என்று கவலைப் படுவீர்கள். இடமாற்றம் செய்யலாமா என்ற சிந்தனை மேலோங்கும். உடன் இருப்பவர்களாலும் குடியிருக்கும் வீட்டாலும் சில பிரச்சினைகள் உண்டு. கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். குழந்தைகளின் சுபகாரியங்கள் காலாகாலத்தில் நடைபெறும். குலதெய்வ வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும். பணிபுரியும் பெண்களுக்கு கூடுதல் பொறுப்புகள் வரலாம். திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

இல்லத்துப் பூஜை அறையில் விநாயகப் பெருமான் படம் வைத்து விநாயகர் கவசம் பாடி வழிபடுவது நல்லது. பாதியில் நின்ற பணி மீதியும் நடைபெற ஆதியந்தப் பிரபுவை வழிபட்டு வாருங்கள். அனைத்து யோகங்களும் வந்து சேரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனா...

கம்பஹா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி இந்திக்க வன்னிநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7,9)

## யாழ்.மறை...

நாட்டின் சமகால நிலைவரங்கள் மற்றும் அரசியல் விவகாரங்கள் தொடர்பில் யாழ்.மறை மாவட்ட ஆயருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

யாழ்.மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் சமகால அரசியல் நிலைவரங்கள் மற்றும் முன்னெடுக்கப்படும் அரசியல் நலத்திட்டங்களை எடுத்துரைத்தார்.

இச்சந்திப்பில் கடற்றொழில் அமைச்சரின் பிரத்தியேக செயலாளரான கே.தயானந்தாவும் கலந்துகொண்டார். (ம-7,9,33)

## புலனாய்வாளர்...

கொண்டுள்ளனர்.

இவ்வாறு போராட்டக்களத்திற்குள் நுழைந்து மக்களை மிரட்டியவர்கள் சிறிலங்கா புலனாய்வாளர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குழப்பகாரர்கள், போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர்களிடம் போராட்டத்தில் ஈடுபட்டால் கடுமையான தண்டனைகளை அனுபவிக்க வேண்டி வரும், போராட்ட களத்திற்கு முன்னே செல்லக்கூடாது என பல்வேறு விடயங்களை கூறி மிரட்டி போராட்டத்தை திசை திருப்ப முயன்றனர்.

இவ்வாறு திசை திருப்ப முற்பட்டபோது அருகில் இருந்தவர்கள் அவர்களை அவ்விடத்திலிருந்து வெளியே அகற்றியுள்ளனர். இதனால் அவ்விடத்தில் சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டது. (ம-7,9)

## வடக்கில் 3 இடங்...

குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது இலங்கை முதலீட்டுச் சபையின் பிரதிநிதியால் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

"யாழ்ப்பாணம் மாவட்டத்தில் காங்கேசன்துறையில் சீமெந்து தொழிற்சாலை அமைந்துள்ள இடத்தை நேரில் சென்று பார்வையிட்டுள்ளோம். அங்கே முதலீட்டு வலயம் அமைக்க உத்தேசித்துள்ளோம். கிளிநொச்சியில் இரசாயன தொழிற்சாலை அமைந்துள்ள இடத்திலும், மாங்குளத்தில் 400 ஏக்கரிலும் முதலீட்டு வலயங்கள் அமைக்க உத்தேசித்துள்ளோம்" என்று முதலீட்டுச் சபை பிரதிநிதி குறிப்பிட்டார். (ம-7,9)

## நாட்டின் நிதி...

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த கூட்டத்தொடரின்போது, ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்கள பணிப்பாளர், கிருஷ்ணா ஸ்ரீநிவாசன் இது தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

இலங்கையில் அதிகரித்திருந்த பணவீக்கம் தற்போது குறைவடைந்துள்ளபோதும், நிதிக் கொள்கைகள் ஊடாக பணவீக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும் என கிருஷ்ணா ஸ்ரீநிவாசன் வலியுறுத்தியுள்ளார். (ம-7,9)

## தையிட்டி...

14 குடும்பங்களுக்கு சொந்தமான அண்ணளவாக 100 பரப்பு காணியை விடுவிக்க கோரியும் சட்டவிரோதமாக கட்டப்பட்ட பௌத்த கட்டுமானத்தை அகற்றக் கோரியும் பௌத்தமயமாக்கல் திணிப்பை எதிர்த்தும் போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சட்டவிரோதமாக கட்டப்பட்ட தையிட்டி விகாரையை அகற்றுமாறு கோரி கடந்த புதன்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், அதன் தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டு போராட்டம் இடம்பெற்றது.

தையிட்டி எமது நிலம், புத்த விகாரை வேண்டாம், இராணுவமே வெளியேறு என போராட்டக்காரர்கள் பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தையிட்டி விகாரையில் வெசாக் தினத்தை முன்னிட்டு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றது.

வெசாக்கூடுகள் கட்டப்பட்டு பௌத்த கொடிகள் பறக்கவிடப்பட்டு பௌத்த பாடல்கள் போடப்பட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

குறித்த ஏற்பாடுகளை இராணுவத்தினரே மேற்கொண்டனர். (ம-7,9,33)

## சகிப்புத்தன்மை...

லேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கௌதம புத்தரின் பிறப்பு மற்றும் பரிநிர்வாணமடைதலைக் குறிக்கும் வெசாக் பௌர்ணமி தினத்தை கொண்டாடும் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்திருக்கும் அவர், இத்தினத்தை கொண்டாடுவதன் நோக்கத்துக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் இலக்குகளுக்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பு காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களுக்கிடையிலான புரிந்துணர்வு, நிலையான அமைதி மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புதல் என்பனவே அவையாகும் என்றும் அன்ரோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் பொதுமக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் கௌதம புத்தரின் போதனைகளான சகிப்புத்தன்மை, கருணை, மனிதாபிமானம் ஆகியவற்றை பின்பற்றுவது இன்றியமையாததாகும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதுமாத்திரமன்றி அனைவரும் வாழ்வதற்கு ஏற்புடைய அமைதியான தும் சமாதானமானதுமான உலகத்தை கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து பணியாற்ற முன்வரவேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## அரியாலையில்...

இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளும் வானும் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றது.


இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரே ஸ்தலத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் அரியாலை பூம்புகார் பகுதியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அவரது மனைவி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# ராஜஸ்தானை வென்றது குஜராத்



ராஜஸ்தானுக்கு எதிரான போட்டியில் குஜராத் அணி 9 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் நேற்றைய போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ், குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின.

டாஸ் வென்ற ராஜஸ்தான் பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய ராஜஸ்தான் அணி 17.5 ஓவரில் 118 ரன்னுக்கு ஆல் அவுட்டானது.


கப்டன் சஞ்சு சாம்சன் அதிகபட்சமாக 30 ரன்னும் டிரெண்ட் போல்ட் 15 ரன்னும் எடுத்தனர். குஜராத் சார்பில் ரஷீத் கான் 3 விக்கெட்டும் நூர் அகமது 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 119 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் குஜராத் அணி களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர்களான விரித்திமான் சகா, சுப்மன் கில் இருவரும் முதல் விக்கெட்டுக்கு 71 ரன்கள் சேர்த்தனர். சுப்மன் கில் 36 ரன்னில் அவுட்டானார். அடுத்து இறங்கிய ஹர்திக் பாண்ட்யா அதிரடியாக ஆடினார்.

சகா 41 ரன்னும் பாண்ட்யா 39 ரன்னும் எடுத்து அவுட்டாகாமல் இருந்தனர்.

இறுதியில், குஜராத் அணி 13.5 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 119 ரன்களை எடுத்து அபார வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக குஜராத் அணியின் ரஷித் கான் தெரிவானார். அத்துடன் புள்ளிப்பட்டியலிலும் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. (ம-7,9)



### மக்களின் உரிமைகளைப் பாதிக்கும்

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு பெரமுன ஆதரவு வழங்காது

## சாகர காரியவசம்

(கொழும்பு)

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் தொடர்பான யோசனைகளை எதிர்வரும் வாரம் நீதியமைச்சரிடம் முன்வைப்போம்.

நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் சட்டமூலங்களுக்கு ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் பெரும்பாலான விடயங்கள் அரசியலமைப்பின் மூன்றாம் அத்தியாயத்தின் உறுப்புரைகளுக்கும், ஜனநாயக கொள்கைக்கும் எதிரானதாக உள்ளது. ஆகவே இந்த சட்டமூலம் முழுமையாக திருத்தம் செய்யப்பட வேண்டும்.

திருத்தமில்லாமல் சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டால் அதற்கு எதிராக வாக்களிப்போம் என ஜனாதிபதி, நீதியமைச்சர் ஆகியோரிடம் வலியுறுத்தினோம்.

அத்துடன் இந்த சட்டமூலத்துக்கு எதிராக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கடும் எதிர்ப்புகள் வெளியாகியுள்ளன.

ஆகவே சட்டமூலத்தை பரிசீலனை செய்ய மீளாய்வுக் குழு ஒன்றை நியமிக்குமாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

சட்டமூலத்தின் பெரும்பாலான ஏற்பாடுகள் அரசியலமைப்புக்கு முரணானது என்பதை நீதியமைச்சர் ஏற்றுக் கொண்டுள்ளார். சட்டமூலம் தொடர்பில் பொதுமக்கள், அரசியல் தரப்பினரிடமிருந்து ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. சட்டமூலம் தொடர்பான எமது யோசனைகளை எதிர்வரும் வாரம் நீதியமைச்சரிடம் முன்வைப்போம்.

நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் சட்டமூலங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் கடந்த மே தின கூட்டத்தில் வெளியிடப்பட்ட யோசனைகளை செயற்படுத்துவது தொடர்பில் தொழில் அமைச்சருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளோம் என்றார். (ம-7,9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி
பேருந்து சேவை
இனிவரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும்
பெயரில் அதே
நிர்வாகத்தின் கீழ்
இயங்கும் என்பதை
அறியத் தருகின்றோம்



077 544 8503

(15337)



## மணமகள் தேவை

யாழ் இந்து உயர் கௌரவ குடும்பம் 1980 ஆம் ஆண்டு சதய நட்சத்திரத்தில் பிறந்த சகல வசதிகளுடைய Account Assistant ஆக பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. (15472)

077 367 1062



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6487)

வயது :-30 வயதிற்குட்பட்டோர்
(இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு
முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




(C-6487)

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport க்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

0777-068-777


# மின்சாரத் துறையின் மறுசீரமைப்பிற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

(கொழும்பு)

இலங்கையில் மின்சாரத் துறையின் மறுசீரமைப்பு மற்றும் வினைத்திறன் வேலைத்திட்டம் குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கி ஆலோசனை வழங்குவதாகவும், வங்கியின் ஆலோசனை சேவைகள் பணிப்பாளர் உள்ளிட்ட விசேட குழுவொன்று தற்போது இலங் கையில் இருப்பதாகவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அங்கு, மின்சார வாரியத்தின் மறுசீரமைப்புத் திட்டத்திற்குத் தேவை யான தொழில்நுட்ப உதவிகள், மின்சார நிறுவனங்களாக மாற்று வதில் பொது-தனியார் கூட்டு முயற்சி முறைகளை ஏற்றுக்கொண்டு தேவை யான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கு சாதகமான சூழலை உருவாக்குதல் மற்றும் பங்களிப்பைப் பெறுதல். தனியார் துறை அந்த திட்டங்களை கண்டறிந்து செயல் படுத்த வேண்டும்.

அமைச்சகத்திற்குள் ஒரு சிறப்பு பிரிவை நிறுவுதல் மற்றும் அந்த திட்டங்கள் மற்றும் பிற புதுப் பிக்கத்தக்க திட்டங்களுக்கு தேவை யான நிதியுதவி குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவுறுத் தல்களை பெறும் என்றும் அமைச்சர் கூறினார். (ம-7.9)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு
(நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி ) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (120,000/-) ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15473)

076 755 8606
077 638 5683



## காணி விற்பனைக்கு

கைதடி-நுணாவிலிலுள்ள (A9 வீதியில்) 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பரப்பு ஒன்று 45 இலட்சம். (15470)

077 824 9234
077 839 5444



## வேலையாள் தேவை

ஈர அரிசி அரைத்து
வறுத்தல்
சம்பளம் :2000/= மேல்

(C-6485)

077 936 1356



## மணமகன் தேவை

யாழ் இந்து உயர் கௌரவ குடும்பம் 1997 அவிட்டம் 4 ஆம் பாதம் செவ்வாய் 4 இல் அரச தொழில் செய்யும் விவாகரத்தான மணமகளுக்கு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மணமகன் தேவை.

தொடர்பு (15469)

077 367 1062



## THE OPEN UNIVERSITY OF SRILANKA JAFFNA REGIONAL CENTRE

**CALLING FOR APPLICATIONS**

Applications are called for the following programmes offered at Jaffna Regional Centre of The Open University of Sri Lanka. Interested persons are requested to apply online at https://ou.ac.lk/ before the specified closing dates.

| Programme | Application Closing Date |
|---|---|
| Advanced Certificate in Social Sciences | 15 May 2023 |
| BA in Social Sciences | 15 May 2023 |
| BA in Youth & Community Development | 15 May 2023 |
| Diploma in Science in Laboratory Technology | 31 May 2023 |
| Advanced Certificate in Entrepreneurship and Small Business Management | 15 June 2023 |

For more information visit https://ou.ac.lk/upcomingpro

021-222-3374
No.303, Brown Road,
Kokkuvil, Jaffna.

The Registrar,
The Open University
of Sri Lanka

Advertising Sponsorship:
Metro Land media employees canada

(15475)



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு
- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 36 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

பார்வையிடும் நேரம் :
காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை
தரகர் தேவையில்லை

(15474)

தொடர்புகளுக்கு :- ஜெயம்
077 814 7389, 077 986 5457



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்.

பார்வையிடும் நேரம் : காலை 06 மணி தொடக்கம் மாலை 06 மணிவரை

(15474)

தொடர்புகளுக்கு :- ஜெயம்
077 814 7389, 077 986 5457


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.